**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC513/2004** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution : | **PW - 43** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | ஜாம்சோ லாரன்ஸ் |
| Father's / Husband Name | : | ஞானபிரகாசம் |
| Village | : | கீழ புனவாசல், வடக்குத்தெரு, திருவையாறு, |
| Taluk & District | : | திருவையாறு தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம் |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2018 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2018**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.கண்ணகி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, தட்டச்சர் ச.சுரேஷ்**

**CC513/2004** Date: 13.08.2018

முதல் விசாரணை

நான் கீழ புனவாசல், வடக்குத்தெரு, திருவையாறு என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1ஐ தெரியாது. ஆஜர் 1வது எதிரியை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 10.05.1999ந்தேதியன்று தஞ்சாவூர் அய்யங்கடைவீதியில் உள்ள கணபதி ஜுவல்லரியில் காமதேனு சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் மாதம் ரூபாய் 150வீதம் இரண்டு வருடங்களாக 2001ஆம் ஆண்டு வரை பணம் செலுத்தினேன். மொத்தம் ரூபாய் 3750ஐ கட்டியுள்ளேன். கட்டி முடித்த பின்பு தங்க சங்கிலி எடுத்துக்கொள்ளலாம் என்று கடைக்கு சென்று கேட்டேன். பள்ளிக்கூட பையுடன் இனாமாக பெற்றுக்கொள்ளலாம் என்று ஆஜர் 1வது எதிரி கூறினார். பின்னர் செய்திதாள்களிலும், தொலைக்காட்சி சேனல்களிலும் 1வது எதிரி கடையை பூட்டிவிட்டு ஊரைவிட்டு சென்றதாக கேள்விப்பட்டேன். கடைக்கு சென்று பார்த்தேன். கடை பூட்டியிருந்தது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அவர் ஓடிவிட்டதாக கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் பணம் செலுத்தியதற்கான பாஸ் புத்தகம் எண் 1606ஆகும். அது சா.பொ.82ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

தஞ்சாவூர் காசுக்கடைத்தெருவில் கணபதி ஜுவல்லரி என்ற கடையே இல்லையென்றாலும், காமதேனு சிறுசேமிப்பு திட்டம் என்ற திட்டமே இல்லையென்றாலும், நான் முன்விசாரணையில் சொல்லியுள்ளவாறு மேற்படி திட்டத்தில் சேரவே இல்லையென்றாலும், அதே போல் தொகை எதுவும் செலுத்தவில்லையென்றாலும் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது தொகை கட்டி முடித்த பின்பு தங்க சங்கிலி எடுத்துக்கொள்ளலாம் என்று கடைக்கு சென்று கேட்டேன் என்றும், பள்ளிக்கூட பையுடன் இனாமாக பெற்றுக்கொள்ளலாம் என்று ஆஜர் 1வது எதிரி கூறினார் என்றும், பின்னர் செய்திதாள்களிலும், தொலைக்காட்சி சேனல்களிலும் 1வது எதிரி கடையை பூட்டிவிட்டு ஊரைவிட்டு சென்றதாக கேள்விப்பட்டேன் என்றும், கடைக்கு சென்று பார்த்தேன் என்றும், கடை பூட்டியிருந்தது என்றும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அவர் ஓடிவிட்டதாக கூறினார்கள் என்றும் சொல்லியுள்ளேன் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சா.பொ.82 இவ்வழக்கிற்கு சம்மந்தப்படாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. நான் மாவட்ட குற்றப்பிரிவு போலீசாரிடம் எழுத்துப்பூர்வமாக புகார் எழுதிக்கொடுத்துள்ளேன். போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் முன் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.